10/=

பக்கங்கள் 06

# எதிரொலி
Ethiroli

குரல் 01 அதிர்வு 87 புதன்கிழமை ஓகஸ்ட் 09 2017 ethirolimedia@gmail.com 021 300 48 48

# உடுவில், தெல்லிப்பளை பிரதேச செயலகங்கள் முற்றுகை

சமுர்த்திப் பயனாளிகள் பரலது பெயர்கள் நீக்கப்பட்டுள்ள நிலையில் அதற்கு எதிப்புத் தெரிவித்து பிரேதேச செயலகங்களின் முன் மக்கள் போராட்டங்களில் ஈடுபட்டுவருகின்றனர்.

இன்று யாழ் மாவட்டத்தில் உடுவில் பிரதேச செயலகம் மற்றும் தெல்லிப்பளைப் பிரதேச செயலகங்களை முற்றுகையிட்டு சமுர்த்திப் பயனாளிகள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் பணியாளர்கள் கடமைக்காக பிரதேச செயலகங்களுக்குள் செல்லமுடியாத நிலை ஏற்பட்டது.

இதன்போது மக்களை அப்புறப்படுத்த பொலிஸார் வரவழைக்கப்பட்டதாகத் தெரியவருகின்றது. நீக்கப்பட்ட தமது பெயர்கள் மீள இணைக்கப்பட்டு, பழைய முத்திரைப் பட்டியலின் படி சமுர்த்தி வழங்கப்பட வேண்டும் மற்றும் சமுர்த்தி முத்திரை எல்லோருக்கும் சமமாக வழங்கப்பட வேண்டும் உள்ளிட்ட பல கோரிக்கைகளை முன்வைத்து மக்கள் போராட்டத்தினை முன்னெடுத்தனர்.(எ)



# ஆவா குழு

## தெற்கில் தலைமறைவு

யாழ்ப்பாணக் குடாநாட்டில் சிறப்பு அதிரடிப்படையினருடன் இணைந்து பொலிஸார் மேற்கொண்டு வரும் தேடுதல் நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளதால், ஆவா போன்ற வாள்வெட்டுக் குழுக்களின் முக்கிய தலைவர்கள் தெற்கு நோக்கித் தப்பி யோடத் தொடங்கியுள்ளனர் என பொலிஸ் தரப்பு தகவல் வெளியிட்டுள்ளது.

ஆவா குழுவில் முன்னணியில் இருந்து செயற்பட்ட பலரும், யாழ். குடாநாட்டில் அதிகரித்துள்ள கைதுகள் மற்றும் சிறப்பு அதிரடிப் படையினரின் நடவடிக்கைகளால், தெற்கிலுள்ள மாகாணங்களுக்குத் தப்பிச் சென்றுள்ளனர். கொழும்பு மற்றும் அதனை அண்டியுள்ள பகுதிகளில் உள்ள வீடுகள் மற்றும்

06

## வெளிநாட்டு தொடர்பா?

வடக்கில் செயற்படும் ஆவா குழுவினருக்கு வெளிநாட்டுத் தொடர்புகள் உள்ளதா என்பதைக் கண்டறியும் விசாரணைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருவதாக பொலிஸ் பேச்சாளர் ருவான் குணசேகர தெரிவித்துள்ளார்.

“உள்நாடு மற்றும் வெளிநாட்டில் இருந்து ஆவா குழுவுக்கு நிதியளிக்கும் அல்லது அவர்களை இயக்கும் நபர்கள், குழுக்களைக் கண்டறிவதற்கான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. விடுதலைப் புலிகளுடன் சந்தேக நபர்கள் கடந்த காலங்களில் தொடர்பு வைத்திருந்தார்களா என்றும் புலனாய்வு அமைப்புகள் ஆராயவுள்ளன.

இந்தச் சம்பவங்கள் தொடர்பான பயங்கரவாதப் புலனாய்வு பிரிவும் தனியான விசாரணைகளை நடத்தி வருகிறது. இதுபோன்ற குழுக்கள் நாட்டில் செயற்படுவதற்கு பொலிஸ் துறை இடமளிக்காது. பயங்கரவாதப் புலனாய்வு பிரிவினரால் இந்தவாரம் மேற்கொள்ளப்பட்ட

06

# மீண்டும் பாயும் பொலிஸ்

**இன்றும் இருவர் கைது**

யாழ். கொக்குவில் பகுதியில் வைத்து பொலிஸார் மீது மேற்கொள்ளப்பட்ட வாள்வெட்டுச் சம்பவம் தொடர்பில் மேலும் இருவர் இன்று அதிகாலை கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். சுன்னாகம் பொலிஸின் குற்றப் புலனாய்வு பிரிவினர் இவர்களை கைது செய்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

06

# 6 கிலோவில் ‘ஆச்சரியச் சிசு’!



பலப்பிட்டிய வைத்தியசாலையில் ஆறு கிலோ கிராம் எடையுடைய சிசுவொன்று நேற்று பிரசவிக்கப்பட்டுள்ளது.

பென்தொட்ட ஹபுருகல பிரதேசத்தைச் சேர்ந்த 28 வயதான தாய் ஒருவரே, பலப்பிட்டிய ஆதார வைத்தியசாலையில்இந்தச் சிசுவைப் பிரசவித்துள்ளார்.

சத்திர சிகிச்சை ஊடாக இந்தச் சிசு பிரசவிக்கப்பட்டதாகவும் தாயும் சேயும் நலமாக இருப்பதாகவும் வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்தச் சிசுவின் எடை ஐந்து கிலோ மற்றும் 980 கிராம் என தெரிவிக்கப்படுகிறது.

சாதாரணமாக பிறக்கும் குழந்தை ஒன்றின் நிறை 3.5 கிலோகிராம் என்பது குறிப்பிடத்தக்கது. (இ)



# லஹிரு விடுதலை

அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஒருங்கிணைப்பாளர் லஹிரு வீரசேகரவை நீதிமன்றம் இன்று பிணையில் விடுவித்துள்ளது.

சில நிபந்தனைகளின் கீழ் கொழும்பு பிரதான நீதவான் இந்தப் பிணையை வழங்கி உத்தரவிட்டுள்ளார்.

அரச சொத்துகளுக்கு சேதம் ஏற்படுத்தக் கூடாது, வன்முறையாக நடந்து கொள்ளக்கூடாது எனவும் பிணை நிபந்தனைகளை மீறக்கூடாது எனவும், மீறினால் வழக்கு விசாரணை முடியும் வரை விளக்கமறியலில் இருக்க நேரிடும் எனவும் நீதவான் கூறியுள்ளார்.

அதேவேளை, அனைத்துப் பல்கலைக்கழக பிக்கு ஒன்றியத்தின் ஒருங்கிணைப்பாளர் டெம்பிட்டியே சுகத்தானந்த தேரரும் நேற்று பிணையில் விடுவிக்கப்பட்டார்.

கடந்த ஜூன் 21 ஆம் திகதி கொழும்பில் உள்ள சுகாதார அமைச்சின் அலுவலகத்துக்குள் புகுந்து அங்கிருந்த சொத்துக்களைச் சேதப்படுத்தி 9 லட்சம் ரூபா நஷ்டத்தை ஏற்படுத்தியதாக இவர்களுக்கு எதிராகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. (இ)

# இளஞ்செழியனுக்கு மைத்திரி கடிதம்





யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியனுக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

ஜனாதிபதி அனுப்பிவைத்த குறித்த கடிதம் நேற்றுக் காலை நீதிபதிக்கு கிடைத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 22ஆம் திகதி யாழ். நல்லூர் பகுதியில் நீதிபதி இளஞ்செழியனை இலக்கு வைத்து மேற்கொள்ளப்பட்டதாக கூறப்படும் துப்பாக்கிச்சூட்டு சம்பவம் தொடர்பிலும், இதில் படுகாயமடைந்த இரு மெய்ப்பாதுகாவலர்களில் ஒருவர் உயிரிழந்ததுடன் மற்றைய நபர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளமை தொடர்பிலும் ஜனாதிபதிக்கு நீதிபதி இளஞ்செழியன் அண்மையில் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்திருந்தார்.

இதற்கு ஜனாதிபதியின் செயலாளர் ஒஸ்டின் பெர்னாண்டோ கையெழுத்திட்டு பதில் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார். “அன்றைய தினம் இடம்பெற்ற துன்பகரமான சம்பவத்தின் போது நீதிபதியாகிய நீங்கள் நடந்து கொண்ட விதம் தொடர்பாக ஜனாதிபதி பாராட்டுக்களைத் தெரிவித்துள்ளார்” என அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# இரணைதீவு மக்கள் கொழும்பில் போராட்டம்



தங்களது காணிகளை விடுவிக்குமாறு கோரி, கிளிநொச்சி, இரணைதீவு மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இன்று காலை கோட்டை புகையிரத நிலையத்தை வந்தடைந்த அவர்கள், அங்கிருந்து பேரணியாகப் புறப்பட்டு, ஜனாதிபதி செயலகத்துக்கு செல்ல முற்பட்ட வேளையில் பொலிஸாரால் லோட்டஸ் வீதியில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். அவர்கள் முன்னோக்கி நகர முடியாதவாறு

06

# கழிப்பறைக்குள் கமெரா வைத்தியருக்கு அழைப்பாணை



அரசாங்க வைத்தியசாலை ஒன்றின் கழிப்பறைக்குள் சி.சி.ரி.வி கமெரா பொருத்தியதாக வைத்தியர் ஒருவர் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

குறித்த வைத்தியருக்கு எதிராக அனுராதபுரம் தலைமை பொலிஸார், அந்தப் பகுதி நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்துள்ளனர். வைத்தியருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்வதற்கு போதுமான காரணங்கள் உள்ளதாக, சட்டமா அதிபருக்கு கிடைத்த தகவல்களுக்கமைய இந்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

குற்றம் சுமத்தப்பட்டுள்ள வைத்தியரை எதிர்வரும் மாதம் 15ஆம் திகதி அனுராதபுரம் நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு உத்தரவிடப்பட்டுள்ளது. (உ)

# செஞ்சோலைப் படுகொலை நினைவேந்தல் அழைப்பு

செஞ்சோலைப் படுகொலையின் 11ஆம் ஆண்டு நினைவேந்தல் வள்ளிபுனம் இடைக்கட்டுச் சாலையில் எதிர்வரும் திங்கட்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

செஞ்சோலைப் படுகொலைக்கு நீதிகோரியும், உயிரிழந்த மழலைகளின் ஆத்ம சாந்திக்காகவும் நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி அறிவுறுத்தியுள்ளது.

செஞ்சோலை சிறுவர் காப்பகம் மீது 2006ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 14 ஆம் திகதி வான் படையினர் நடத்திய குண்டுத் தாக்குதலில் பாடசாலை மாணவிகள் 61 பேர் உயிரிழந்தனர். 129 பேர் காயமடைந்திருந்தனர். (உ)

# நல்லாட்சி என்பதில் நம்பிக்கை இல்லை

நல்லாட்சி எனக் கூறிவரும் இந்த அரசாங்கத்தின் நடவடிக்கைகள் தொடர்பில் எவ்வித நம்பிக்கையும் இல்லை என, முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அண்மையில் கொள்கலன் ஒன்றில் இருந்து போதைப் பொருட்கள் மீட்கப்பட்ட சம்பவம் குறித்து இதுவரை உரிய விசாரணைகள் மேற்கொள்ளப்படவில்லை எனவும் அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றின் பின்னர், ஊடகவியலாளர்களிடம் கருத்து வெளியிட்ட போதே மஹிந்த மேற்கண்டவாறு கூறியுள்ளார். (உ)



# போராட்டம்




சமுர்த்தி பயனாளிகள் பட்டியலில் இருந்த தமது பெயர்கள் நீக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்து சமுர்த்திப் பயனாளிகள் போராட்டங்களில் ஈடுபட்டுவருகின்றனர். இந்நிலையில் இன்று காலை புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்தை முற்றுகையிட்டு சமுர்த்தி பயனாளிகள் போராட்டம் நடத்தியுள்ளனர். (உ)

# சமுர்த்தி உதவி பெற்றுக்கொடுப்பேன்




சமுர்த்தி உதவிகளைப் பொருத்தமானவர்கள் பெற்றுக்கொள்வதற்கான முயற்சி எடுக்கப்படும் என நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

"சென்ற ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் சமுர்த்தி பெறுபவர்களின் எண்ணிக்கை கூட்டி அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால், சமுர்த்தி உதவி பெறுபவர்கள் தாங்கள் பெறும் சமுர்த்தி உதவிகள் மற்றும் தங்கள் பெயர்கள் வெட்டப்படுகின்றன என முறைப்பாடுகள் செய்கின்றனர். குறிப்பாகப் போரினால் பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்குப் பிரதேசங்களில் முழுமையாக மீள்குடியேற்றங்கள் இடம்பெறவில்லை. உழைக்கும் தகுதியுள்ளவர்களுக்கு உழைக்கும் வாய்ப்புக்கள் உருவாகவில்லை. அன்றாட வாழ்க்கையை நடத்துவதற்கு வாழ்வாதாரம் இல்லை வறுமைக் கோட்டின் கீழ் வாழ்க்கை நடத்திச் செல்லமுடியாமலுள்ளோர் தொகை அதிகரித்துள்ளது.

இந்நிலையில் இந்த வாரத்தில் நாடாளுமன்றம் நடைபெறும் காலத்தில் சமுர்த்தி அமைச்சரிடம் பேசி தகுந்தவர்கள் பாதிக்கப்படாமல் அவர்களுக்கு உதவும் பொருட்டுப் பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென வலியுறுத்தியுள்ளேன்." - என்றுள்ளது. (உ)

# ரணிலே பொறுப்பு



இலங்கை மத்திய வங்கியின் பாரிய பிணைமுறி மோசடியில் சம்பந்தப்பட்டுள்ள ரவி கருணாநாயக்க உடனடியாகப் பதவி விலக வேண்டுமென மக்கள் விடுதலை முன்னணியின் பிரதம செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

அத்துடன், இந்த மோசடிக்கான முழுப்பொறுப்பையும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவே ஏற்கவேண்டுமெனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

"பல்வேறு எதிர்ப்புகளுக்கு மத்தியிலும் மத்திய வங்கியின் ஆளுநர் பதவியை ரணில் விக்கிரமசிங்க தனது உயிர்த் தோழனான அர்ஜுன் மகேந்திரனுக்கு பெற்றுக்கொடுத்தார். அதன் மூலமாக இந்தப் பிணைமுறி மோசடிக்கு வழிசமைத்துக் கொடுத்தவரும் அவரேதான். அந்த மோசடியில் பிரதான பங்கை வகித்த ரவி கருணாநாயக்கவை ரணில் தொடர்ந்தும் காப்பாற்றி வந்ததாலேயே 2015 பெப்ரவரி 27ஆம் திகதி முதல் அண்மைக்காலம் வரை இந்தப் பாரிய மோசடி மூடி மறைக்கப்பட்டு வந்தது- என்றார்.

# போதைப் பொருளுடன் ஒருவர் கைது

உருகொடவத்தை மேம்பாலத்துக்கு அருகில் போதைப் பொருளுடன் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இவர் வசம் இருந்து 20 கிலோ கிராம் கஞ்சா மற்றும் ட்ரமடோல் எக்ஸ் வகையான மாத்திரைகள் 2000 என்பன கைப்பற்றப்பட்டுள்ளன.

மேலும், சந்தேகநபர் கொழும்பு - 10 பகுதியைச் சேர்ந்த 30 வயதான ஒருவராகும். கைதுசெய்யப்பட்ட சந்தேகநபரை இன்று மாளிகாகந்தை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக, கிராண்ட்பாஸ் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். (உ)

# ஒன்றிணைந்திருக்க அவசியம் இல்லை



பிரதான கட்சிகள் இரண்டும் எப்போதும் ஒன்றிணைந்து இருக்க முடியாது எனவும், அவ்வாறு இருக்க அவசியம் இல்லை எனவும், தேர்தலின் போது வேறுவேறாகப் போட்டியிட முடியும் எனவும், அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க குறிப்பிட்டுள்ளார். ஹகுரான்கெத்த பகுதியில் இடம்பெற்ற நிகழ்வில் ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த அவர், "எது எவ்வாறு இருப்பினும், மஹிந்த ராஜபக்ஷ, மைத்திரிபால சிறிசேனவிடம் தனது விருப்பத்தின் பேரில் கட்சியை ஒப்படைத்துவிட்டு தற்போது, வேறுபுறம் இருந்து பகைப்பது தகுதியானதல்ல. ஜனாதிபதி தனியாட்சி அமைப்பதற்கான சக்தியை கோரி நிற்கையில், இதுபோன்று செயற்படுவது பொருத்தமில்லை. அவர் செய்யவேண்டியது கட்சியின் ஒற்றுமையையும் வலிமையையும் மேம்படுத்தும் நடவடிக்கைகளே" எனவும் குறிப்பிட்டுள்ளார். (உ)

# எழுச்சிக் கிராமம் கையளிப்பு

கிராம எழுச்சித் திட்டத்தின் கீழ் குச்சவெளி பிரதேச செயலாளர் பிரிவில் அமைக்கப்பட்டுள்ள வள்ளுவர் கோட்டம் என்னும் எழுச்சிக் கிராமம் பொதுமக்களின் பாவனைக்காக கையளிக்கப்படவுள்ளது. பெரிய குளம்எண்ற இடத்தில் அமைந்துள்ள இந்தக் கிராமத்தை பொதுமக்களின் பாவனைக்காக கையளிக்கும் நிகழ்வு அமைச்சர் சஜித் பிரேமதாசவின் தலைமையில் நாளை இடம்பெறவுள்ளது.

இந்தக் கிராமத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள வீடுகள், குடிதண்ணீர் வசதி, மின்சாரம் , உள்ளக வீதிக்கட்டமைப்பு மற்றும் பிரதேச பாதை உள்ளிட்ட அடிப்படை வசதிகளைக் கொண்டதாக அமைக்கப்பட்டுள்ளன. பயனாளிகளுக்கு வீடுகள் கையளிக்கப்படுவதுடன் விசிறி என்ற கடன் திட்டத்தின் கீழ் 425 பேருக்கான காசோலைகளும் வழங்கப்படவுள்ளன. (உ)

# தகாத வார்த்தை பேசிய அமைச்சருக்கு அழைப்பு

தகாத வார்த்தைகளைப் பயன்படுத்திய விவகாரம் தொடர்பில், விளக்கமளிக்குமாறு அமைச்சர் ஜோன் அமரதுங்கவுக்கு மனித உரிமைகள் ஆணைக்குழு அழைப்பு விடுத்துள்ளது.

போபிடிய பகுதியில் குப்பை கொட்டும் விவகாரம் தொடர்பில், ஊடகவியலாளர் எழுப்பிய கேள்வியை அடுத்து, அமைச்சர் ஜோன் அமரதுங்க தகாத வார்த்தைகளைப் பயன்படுத்தியதாக முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்கள் குறித்தே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மேலும், இச் சந்தர்ப்பத்தில், குறித்த ஊடகவியலாளருக்கு மரண அச்சுறுத்தலும் அமைச்சரால் விடுக்கப்பட்டதாக, மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது. இதனையடுத்து, இது குறித்து விசாரணைகளை ஆரம்பித்துள்ள மனித உரிமைகள் ஆணைக்குழு, முறைப்பாட்டாளரிடம் வாக்குமூலத்தைப் பதிவு செய்துள்ளது.

இந்நிலையில் அமைச்சரை இம் மாதம் 10ஆம் திகதிக்கு முன்னர் வாக்குமூலம் அளிக்க வருமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (உ)



# சுவிஸில் எரிநட்சத்திர மழை

சுவிட்ஸர்லாந்து நாட்டில் இம்மாத இறுதிக்குள் எரி நட்சத்திர மழை பொழியும் எனவும் இதனை வெற்றுக் கண்களால் கண்டு மகிழலாம் எனவும் விண்வெளி ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.
சூரியனைப் பூமி அசுர வேகத்தில் சுற்றி முடிக்க ஒரு ஆண்டு தேவைப்படுகிறது. சூரியனைச்சுற்றி வரும்போது குறிப்பிட்ட சில இடங்களுக்கு செல்லும்போது வால் நட்சத்திரத்தின் சிதறல்கள் பூமியில் மழையாகப் பொழியும்.
இதுபோன்ற ஒரு அரிதான நிகழ்வே சுவிட்ஸர்லாந்து நாட்டில் இம்மாத இறுதிக்குள் நிகழவுள்ளது.குறிப்பாக, எதிர்வரும் 11 மற்றும் 12 ஆகிய தினங்களில் எரி நட்சத்திரங்கள் மழையாகப் பொழியும்.
நள்ளிரவு 11 மணி முதல் அதிகாலை 4.30 மணிக்கு இடையில் இந்தக்காட்சி நிகழ வாய்ப்புள்ளது.
சுமார் 20 நிமிடங்கள் நீடிக்கும் இந்த நிகழ்வில் சுமார் 50 முதல் 75 எரி நட்சத்திரங்கள் சுவிஸ் மண்ணில் மழையாகப் பொழியவுள்ளன. (இ)



# காதலா? கோடியா?

கோடீஸ்வரரின் மகள் ஒருவர் காதலனைக் கரம் பிடிக்க தனது கோடிக் கணக்கான சொத்துக்களை உதறித் தள்ளியுள்ளார்.
மலேசியாவைச் சேர்ந்தவர் கோ கே பெங், மிகப்பெரிய கோடீஸ்வரரான இவரின் சொத்து மதிப்பு 2000 கோடி ரூபாய் ஆகும்.
கே பெங்கின் ஒரே மகளான ஏஞ்சலா பிரான்சிஸ் கோ இங்கிலாந்தில் படிக்கும் போது சக மாணவனான ஜடிடிஹா என்பவரைக் காதலித்துள்ளார்.
கரிபியன்தீவை சேர்ந்தவரான ஜடிடிஹாவை தனது மகள் காதலிப்பதை கே பெங் ஒத்துக்கொள்ளவில்லை.
பெற்றோரின் எதிர்ப்பை மீறி காதலனைத் திருமணம் செய்தால் கோடிக் கணக்கான சொத்துக்களை இழக்க நேரிடும் என அறிந்தும் ஏஞ்சலா, காதலனைக் கரம் பிடித்துள்ளார்.
ஏஞ்சலா - ஜடிடிஹா திருமணம் 30 பேர் முன்னிலையில் தேவாலயத்தில் மிக எளிமையாக நடந்தது.
இதுகுறித்து ஏஞ்சலா கூறுகையில், "என் தந்தையின் நிலைப்பாடு தவறு என நான் நம்பினேன். அதனால் எது சரி என்கிற கேள்வியே எனக்குள் எழவில்லை.பணத்தை இழந்ததில் வருத்தமில்லை.சிக்கனமாக வாழக் கற்றுக் கொண்டுள்ளேன்" எனக் கூறியுள்ளார். (இ)

# செப்ரெம்பரில் அழியுமா பூமி?

பூமியில் மனித இனம் சந்திக்கும் கடைசி மாதம் ஒகஸ்ட் எனவும், அடுத்து வரும் செப்ரெம்பர் மாதத்தில் உலகம் அழிந்துவிடும் என வும் பிரபல எண் கணித நிபுணர் வெளியிட்டுள்ள தகவல் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.
அமெரிக்காவைச் சேர்ந்த டேவிட் மேட் என்பவர் எண்களையும், பூமியில் ஏற்படும் நிகழ்வுகளையும் பைபிளுடன் ஒப்பிட்டு எதிர்காலத்தைத் துல்லியமாகக் கணிப்பதில் சிறந்தவர் ஆவார்.
சமீபத்தில் டேவிட் மேற்கொண்ட ஆய்வில் ஒகஸ்ட் மாதம் தான் மனிதர்களின் கடைசி மாதம் எனவும், செப்ரெம்பர் மாதம் உலகம் அழிந்துவிடும் எனவும் கணித்துள்ளார்.
இது குறித்து டேவிட் வெளியிட்ட தகவலில் 'எதிர்வரும் ஒகஸ்ட் 21 ஆம் திகதி சூரிய கிரகணம் நிகழ்கிறது.இந்தச் சூரிய கிரகணத்துக்கும் உலக அழிவுக்கும் நெருங்கிய தொடர்பு இருக்கிறது.
விண்வெளியில் சுற்றி வரும் 'நிபுரு' எனப்படும் விண்கல் இந்த ஒகஸ்ட் மாதத்தில் எந்த நாளிலும் பூமியில் மோதும் என்பதற்கான அறிகுறி தான் இந்தச் சூரிய கிரகணம்.பைபிளில் குறிப்பிட்டது போல இந்தச் சூரிய கிரகணம் தோன்றும்போது பூமியின் பெரும்பகுதி இருண்டதாகக் காணப்படும்.' என்று கூறியுள்ளார்.
எனினும், டேவிட்டின் இந்தக் கணிப்புத் தவறானது எனவும், இதுபோன்ற கணிப்புகள் ஏற்கனவே கூறப்பட்டு, அவை அனைத்தும் பொய்த்துப் போயின எனவும் விண்வெளி ஆராய்ச்சியாளர்கள் கருத்து தெரிவித்துள்ளனர். (இ)

# அதிர்ந்தது சீனா



100 பேர் உயிரிழப்பு

சீனாவின் சிச்சுவான் மாகாணத்தில் சக்தி வாய்ந்த நிலநடுக்கம் இன்று அதிகாலை ஏற்பட்டுள்ளது. இதில் 100க்கும் மேற்பட்டோர் பலியாகியுள்ளனர்.
நிலநடுக்கத்தின் அளவு ரிக்டர் அளவுகோலில் 7 ஆகப் பதிவாகியுள்ளது.
சக்தி வாய்ந்த இந்த நிலநடுக்கத்தால் கட்டடங்கள் பல இடிந்து விழுந்துள்ளன.
இந்த இடிபாடுகளில் சிக்கி, 100க்கும் மேற்பட்டோர் பலியாகியுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.
நிலநடுக்கம் சக்தி வாய்ந்ததாக இருப்பதால் உயிரிழந்தோரின் எண்ணிக்கை அதிகரிக்கக் கூடும் என அஞ்சப்படுகிறது. இந்த நிலநடுக்கத்தில் சிக்கி, 1000க்கும் மேற்பட்டோர் படுகாயம் அடைந்துள்ளனர். இடிபாடுகளில் சிக்கியவர்களை மீட்கும் பணி தீவிரமாக நடைபெற்று வருகிறது. (இ)

# ஏரிக்குள் விமானம் பயணித்தோர் பலி

சுவிட்ஸர்லாந்திலிருந்து ஜேர்மனிக்குப் பயணித்த சிறிய ரக விமானம் ஒன்று கான்ஸ்டன்ஸ் ஏரியில் விழுந்து நொருங்கியது.
தகவலறிந்து சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸாரும் தீயணைப்பு வீரர்களும், ஹெலிகொப்டர் மற்றும் படகுகளின் உதவியுடன் தேடுதல் வேட்டையில் ஈடுபட்டுள்ளனர்.
இந்த நிலையில், விமானத்தில் சென்ற இருவரின் உடல்களும் மீட்கப்பட்டுள்ளதாகவும், விமானத்தின் பாகங்கள் பல கண்டெடுக்கப்பட்டுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.
விமானத்தின் முக்கிய பாகம் ஒன்று செயலிழந்ததே விபத்துக்கான காரணம் எனவும், இதனால் செங்குத்தாக ஏரிக்குள் விமானம் வீழ்ந்ததாகவும் நேரில் கண்டவர்கள் கூறியுள்ளனர்.(இ)

# வெடிபொருள் வாகனம் பெல்ஜியத்தில் மீட்பு

பெல்ஜியத்தில் வெடிபொருட்களுடன் பாய்ந்த வாகனம் ஒன்றைப் பொலிஸார் துரத்திச் சென்று அதனைப் பிடித்துள்ளனர்.
பெல்ஜியத்தின் தலைநகர் பிரஸ்ஸல்வி வாகனம் ஒன்று சந்தேகத்துக்கிடமான வகையில் சாலையின் முக்கிய பகுதி வழியாகச் சென்றுள்ளது.
இதனிடையே பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் குறித்த வாகனத்தில் வெடிபொருட்கள் இருப்பது உறுதி செய்யப்பட்டது.



அதனையடுத்து பிரஸல்ஸ் பொலிஸார் அந்த வாகனத்தைத் துரத்திச் சென்றனர்.
பொலிஸார் துரத்துவதை அறிந்ததும் வாகனத்தில் இருந்த நபர் அதி வேகமாக, அந்த வாகனத்தைச் செலுத்தியுள்ளார். இதனால் பொலிஸார் வாகனத்தின் மீது துப்பாக்கி சூடு நடத்தினர்.
பின்னர் வாகனத்தை மடக்கிப் பிடித்த பொலிஸார், அந்த நபரைக் கைது செய்துள்ளதுடன், வாகனத்தில் இருந்த வெடிபொருட்களை இராணுவத்திடம் ஒப்படைத்துள்ளனர். (இ)

# வாக்களிக்க நின்ற பெண் பிரசவம்

கென்யாவில் ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிக்க வரிசையில் நின்ற பெண் ஒருவர் குழந்தை ஒன்றைப் பிரசவித்துள்ளார்.
கென்யாவில் பொதுத்தேர்தலுக்கான வாக்கெடுப்பு நேற்று 8 ஆம் திகதி நடைபெற்றது. இதில் புதிய ஜனாதிபதியைத் தேர்ந்தெடுக்கும் பொருட்டு மக்கள் நீண்டவரிசையில் நின்று வாக்களித்தனர்.
இந்த நிலையில் கென்யாவின் மேற்கு பொகோட் பகுதியில் உள்ள வாக்குச் சாவடியில் நின்றிருந்த பாலினா செமனாங் என்ற கர்ப்பிணிக்கு திடீரெனப் பிரசவ வலி ஏற்பட்டது. பின்னர் அவர் அவ்விடத்திலேயே பெண் குழந்தையைப் பெற்றெடுத்துள்ளார்.
பின் உடனடியாக சிகிச்சைக்காக அருகிலுள்ள சுகாதார நிலையத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டு, மீண்டும் வந்து வாக்களித்துள்ளார் அந்தப் பெண்.
வாக்களிக்க வரிசையில் நிற்கும்போதே, குழந்தை பெற்ற அனுபவத்தை மகிழ்ச்சியாகக் கருதுவதாகவும், இதற்காகக் கடவுளுக்கு நன்றி தெரிவித்துக்கொள்வதாகவும் பாலினா செமனாங் கூறியுள்ளார். (இ)

# இரு அளவுகளில் பணம் அரசுக்கு கடும் எதிர்ப்பு



மாறுபட்ட வடிவமைப்புகளில் 500 ரூபா நோட்டு அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளதாகக் கூறி, டெல்லி மேல் சபையில் காங்கிரஸ் போர்க்கோலம் பூண்டது.
கடும் அமளி காரணமாக சபை நாள் முழுவதும் ஒத்திவைக்கப்பட்டது.
டெல்லி மேல் சபை நேற்றுக் கூடியதும், காங்கிரஸ் மூத்த தலைவர்களில் ஒருவரான கபில் சிபல், 500 ரூபா நோட்டுகள் இரு வெவ்வேறு அளவுகளில், மாறுபட்ட வடிவமைப்புடன் அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளதாகக் கூறி ,ஒழுங்குப் பிரச்சினையை எழுப்பினார்.
அப்போது இரு மாறுபட்ட 500 ரூபாத் தாள்களின் போட்டோ நகல்களையும் அவர் சபையில் தூக்கிக் காட்டினார்.
இதனையடுத்து எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அனைவரும் ஓரணியில் நின்று எதிர்ப்புக் குரல் எழுப்பினர்.
இந்த அமளி காரணமாக சபை 15 நிமிடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்டது. மீண்டும் சபை கூடியபோதும் அமளி தொடரவே, சபை நண்பகல் வரை ஒத்திவைக்கப்பட்டது. மறுபடியும் சபை கூடியபோதும், இந்த விவகாரம்தான் விஸ்வரூபம் எடுத்தது. இதையடுத்து சபை நாள் முழுவதும் ஒத்திவைக்கப்பட்டது. (இ)

எதிரொலி
Ethiroli
புதன், 09 ஒகஸ்ட் 2017




# அர்ப்பணம்

உலகத் தடகள 110 மீற்றர் தடை தாண்டி ஓடுதல் போட்டியில் ஜமைக்கா வீரர் மெக்லியோட் தங்கப்பதக்கம் வென்றார். அதை அவர் தனது தாயாருக்கும், சக நாட்டவரான உசைன் போல்ட்டுக்கும் அர்ப்பணிப்பதாகக் கூறினார்.

உலகத் தடகள சம்பியன்ஷிப் போட்டி லண்டனில் நடந்து வருகிறது. இதில் நேற்று முன்தினம் இரவு நடந்த ஆண்களுக்கான 110 மீற்றர் தடை தாண்டி ஓடுதல் போட்டியில், எதிர்பார்த்தது போலவே ஒலிம்பிக் சம்பியனான ஜமைக்காவின் ஒமர் மெக்லியோட் 13.04 விநாடிகளில் இலக்கைக் கடந்து தங்கப் பதக்கத்தை தட்டிச்சென்றார்.

செர்ஜி ஷூபென்கோவ் (13.14 விநாடிகள்) வெள்ளிப்பதக்கமும், ஹங்கேரி வீரர் பலாஸ் பாஜி (13.28) வெண்கலமும் வென்றனர்.

ரஷ்ய தடகள சம்மேளனத்துக்குத் தடை விதிக்கப்பட்டிருப்பதால் அந்த நாட்டைச் சேர்ந்த செர்ஜி ஷூபென்கோவ், ‘பொதுவான தடகள வீரர்’ என்ற அங்கீகாரத்துடன் இந்தப் போட்டியில் பங்கேற்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

வெற்றிக்குப் பின்னர் 23 வயதான மெக்லியோட் கூறுகையில்,

“எனது ஓட்டத்தை எனது தாயாரும் நேரில் பார்க்க வந்திருந்ததால் வெற்றி பெற்றாக வேண்டும் என்ற முனைப்புடன் ஓடினேன். இந்தப் பதக்கத்தை எனது தாயாருக்கு அர்ப்பணிக்கிறேன்.

“இன்னொரு வகையிலும் இந்தப் பதக்கத்தை சிறப்பு வாய்ந்ததாகக் கருதுகிறேன். 100 மீற்றர் ஓட்டத்தின் ஒலிம்பிக் சம்பியன்களான எங்கள் நாட்டைச் சேர்ந்த வீரர் உசைன் போல்ட், வீராங்கனை எலானி தோம்சன் இருவரும் இந்த முறை சம்பியன் மகுடத்தைச் சூடத் தவறிவிட்டனர். அதனால் எனக்குப் பெரும் நெருக்கடி உருவானது. எனவே இங்கு எப்படியாவது வாகை சூடி ஜமைக்காவின் கொடியை பட்டொளி வீசச் செய்ய வேண்டும்என்று விரும்பினேன். அதுவே எனக்கு உந்து சக்தியாகவும் அமைந்தது.

உசைன் போல்ட், இன்னும் நீங்கள் ஜாம்பவான்தான். இந்தப் பதக்கம் உங்களுக்காகவும்தான். ஜமைக்கா தடகளத்துக்குப் பெருமை சேர்த்திருக்கும் நீங்கள் இத்தகைய மரியாதை பெறுவதற்குத் தகுதியானவர்” என்றார்.(ஐ)

## வெளியானது மெர்சல் 3ஆவது போஸ்டர்





விஜய் ரசிகர்களுக்கு இன்று பெரும் விருந்து ஒன்று வழங்கப்பட்டுள்ளது. அத்துடன், நாளையும் மற்றொரு விருந்து அவர்களுக்காகக் காத்திருக்கின்றது.

விஜய் முதன்முதலாக மூன்று வேடங்களில் நடித்து வரும் படம் ‘மெர்சல்’. இந்தப் படத்தை அட்லி இயக்க, தேனாட்டாள் பிலிம் இயக்குகிறது. படத்துக்கு ஏ.ஆர்.ரஹ்மான் இசையமைத்துள்ளார்.

இந்தப் படத்தின் இரு போஸ்டர்கள் ஏற்கனவே வெளிவந்து பெரும் வரவேற்பைப் பெற்றிருந்த நிலையில், மூன்றாவது போஸ்டர் இன்று மதியம் 12 மணிக்கு வெளியிடப்பட்டுள்ளது.

‘ஆளப்போறான் தமிழன்’ என்ற வாசகத்துடன் வெளிவந்துள்ள இந்தப் போஸ்டரில், மெர்சல் படத்தில் இடம் பெறும் பாடல் ஒன்று நாளை வெளியிடப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதை விஜய் ரசிகர்கள் சமூக வலைத் தளங்களில் கொண்டாடி வருகின்றனர். (ஒ)



## வவுனியா மாவட்ட அணி தெரிவு

வவுனியா மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் 15 வயதுப் பிரிவுக்குட்பட்ட மாவட்ட மட்ட துடுப்பாட்ட அணி ஒன்று நேற்றுத் தெரிவு செய்யப்பட்டுள்ளது.


மாவட்ட மட்ட பயிற்சியாளர் தலைமையில் வடதாரகை வலைப்பந்துப் பயிற்சிக் கூடத்தில் இத்தெரிவு இடம் பெற்றது. இத் தெரிவுக்காக மாவட்ட மட்டத்தில் துடுப்பாட்ட அணிகளைக் கொண்ட வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயம், கோவில்குளம் இந்துக் கல்லூரி, செட்டிக்குளம் மகா வித்தியாலயம், புதுக்குளம் மகா வித்தியாலயம், பூவரசங்குளம் மகா வித்தியாலயம், நெளுக்குளம் கலைமகள் மகா வித்தியாலயம், விபுலானந்தாக் கல்லூரி, மடுக்கந்த மகா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளிலிருந்து மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

மாவட்ட துடுப்பாட்டச் சங்கத்தினால் நடத்தப்பட்டு வரும் ஒருநாள் கிரிக்கெட் போட்டித்தொடரின் முதல் சுற்றுப் போட்டிகளின் போது தமது திறமைகளை வெளிப்படுத்திய 50இற்கும் மேற்பட்ட மாணவர்கள் இதில் பங்குபற்றியிருந்தனர்.

இவ்வீரர்களிலிருந்து மாவட்ட பயிற்சியாளராலும் மாவட்ட துடுப்பாட்ட சங்கத் தெரிவுக்குழு உறுப்பினர்களாலும் 24 பேர் கொண்ட 15 வயது பிரிவுக்குட்பட்ட மாவட்டத் துடுப்பாட்ட வீரர்கள் அணி தெரிவு செய்யப்பட்டது.

## சம்சுங் கலக்ஸி

சம்சுங் கலக்ஸி S8 அக்டிவ் ஸ்மார்ட் கைத்தொலைபேசி சார்ந்து பல்வேறு தகவல்கள் வெளியானதைத் தொடர்ந்து S8 அக்டிவ் ஸ்மார்ட் கைத்தொடலைபேசி அமெரிக்காவில் வெளியிடப்பட்டுள்ளது. இதன் ‘அனலொக்’ செய்யப்பட்ட பதிப்பு 849.99 டொலர் என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. (ஒ)




## “சப்பா இப்பவே கண்ணைக் கட்டுதே”



‘பிக்பாஸ்’ நாயகி ஓவியா, நகைச்சுவை நாயகி ஜூலி ஆகிய முக்கிய கதாபாத்திரங்கள் இல்லாதமையால் நகைச்சுவையை வைத்து கல்லா கட்ட ‘பிக் பாஸ்’ முடிவெடுத்துவிட்டார் போலிருக்கிறது. ஆனால் நமக்குத்தான் சிரிப்பு வரவில்லை. இந்த நிகழ்ச்சி சலிப்புறத் தொடங்கிவிட்டது.

துணிதுவைப்பது, பாத்ரூம் கழுவுவதையெல்லாம் பார்க்கவா நாம் அமர்ந்திருக்கிறோம்? சந்தானம் ஒரு திரைப்பட நகைச்சுவைக்காட்சியில் கேட்பதைப் போலவே “எங்களையெல்லாம் பார்த்தா அவ்ளோ மொக்கையாவா தெரியுது?” என்று பிக்பாஸைப் கேட்கத் தோன்றியது.

இது ஒருபுறமிருக்க, ‘முட்டை கணேஷ்’ நிதானமாக உண்பதை சிநேகனும் மற்றவர்களும் நேற்று கிண்டலடித்துக் கொண்டிருந்தார்கள். எவரைப் பற்றியும்கவலைப்படாமல்‘தான்உண்டு தன்முட்டை உண்டு’ என்று கருமமே கண்ணாயினராக இருக்கிறார் கணேஷ்.

அதற்கு முன், காலையில் ‘ஆடுகளம்’ திரைப் படத்திலிருந்து ‘ஒத்த சொல்லாலே’ என்கிற ரகளையான பாடல் ஒலிபரப்பானது. ஒற்றைச் சொல்லை அடிக்கடி சொல்லி சர்ச்சையில் மாட்டிக் கொண்ட காயத்ரி, நடனம் என்ற பெயரில் எதையோ செய்தார், உடற்பயிற்சியோ என்னவோ. பிந்து மாதவியின் நடனம் தேறவில்லை. ஓவியா இல்லாத ஊருக்கு இலுப்பைப் பூ. வழக்கத்துக்கு மாறாக சக்தியும் நேற்று அதிக ‘சக்தி’ வந்து ஆடினார். (ஒ)

## முன்னணி நட்சத்திரங்களின் இணைவு



நடிகர் விஷ்ணுவின் “கதாநாயகன்” திரைப் படத்தின் பாடல்கள் மற்றும் ட்ரெய்லர் நேற்று வெளியாகின. இந்தப் படத்தில் விஜய் சேதுபதி கௌரவத் தோற்றத்தில் நடித்துள்ளார்.

விஜய் சேதுபதி தவிர, அனிருத் மற்றும் சிம்புவும் இந்தப் படத்தின் ஓர் அங்கமாக உள்ளனர்.

அனிருத் இந்தப் படத்தில் பாடல் ஒன்றைப் பாட, நடிகர் சிம்பு இந்தப் படத்துக்கு குரல் கொடுத்துள்ளார்.

தா.முருகானந்தம் இந்தப் படத்தை இயக்கியுள்ளார். நடிகை கத்தரின் திரேசா கதாநாயகியாக நடித்துள்ளார். சேன் ரோல்டன் இந்தப் படத்துக்கு இசையமைத்துள்ளார்.

சிம்பு, அனிருத், விஜய் சேதுபதி என்ற பெரிய பிரபலங்களின் பெயர் இந்தப் படத்தின் மீதான எதிர்பார்ப்பை சற்று அதிகப்படுத்தியுள்ளது. (ஒ)



# பாகிஸ்தான் செல்லும் இலங்கைச் சாரணர்கள்

பாகிஸ்தான் கே2 சிகரத்தின் உச்சியை அடைவதற்காக இலங்கையிலிருந்து புறப்பட்டுச் செல்லும் கண்டி தர்மராஜ கல்லூரியின் சாரணர் குழு மாணவர்கள் மூவர் நேற்று கண்டி ஜனாதிபதி மாளிகையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவைச் சந்தித்தனர்.

உலகின் உயரமான மலைகளில் ஒன்றான பாகிஸ்தானின் கே2 மலையில் ஏறுவதற்கு கண்டி தர்மராஜ கல்லூரியின் மாணவர்களான சஹன் லியனகே, சிதத் குலதுங்க, கசுன் பண்டார ஆகியோர் முதற்தடவையாகத் தகைமை பெற்றுள்ளனர். குறித்த மாணவர்களுக்கு ஜனாதிபதி தனது வாழ்த்தையும், ஆசீர்வாதத்தையும் தெரிவித்தார். (உ)

# காங்கேசன் கடுகதிக்கு மேலதிக பெட்டி இணைப்பு

பாடசாலை விடுமுறையை முன்னிட்டு கல்கிசையிலிருந்து காங்கேசன்துறை வரை பயணிக்கும் கடுகதி ரயிலிலும் காங்கேசன் துறையில் இருந்து கல்கிசை வரை பயணிக்கும் கடுகதி ரயிலிலும் மேலதிக பெட்டியொன்றை இணைக்குமாறு ரயில் பொதுமுகாமையாளர் பணிப்புரை வழங்கியுள்ளார்.

விடுமுறை காலத்தில் கொழும்புக் கோட்டையில் இருந்து பதுளை நோக்கி செல்லும் பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்து வருவதால் இன்று முதல் செப்ரெம்பர் மாதம் 10ஆம் திகதி வரை மேலதிக ரயில் சேவைகளை நடத்துமாறு அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கமைவாக கொழும்பு கோட்டையில் இருந்து முற்பகல் 11.30க்கு பயணமாகும் விசேட ரயில் இரவு 10.40க்கு பதுளையைச் சென்றடையும். பதுளையில் இருந்து காலை 7.15க்கு பயணிக்கும் விசேட ரயில் மாலை 6.12க்கு கொழும்பு கோட்டையை வந்தடையும். (உ)

# இன்றைய கருத்தோவியம்




**ஆமை வேகத்தில்**

# ரஷ்ய நிவாரணம்

வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு 32 தொன் உதவிப் பொருட்களை விமானம் மூலம் ரஷ்யா அனுப்பி வைத்துள்ளதாக, ரஷ்யாவின் சிவில் பாதுகாப்பு, அவசர மற்றும் அனர்த்த உதவி அமைச்சின் செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது. கடந்த மே மாதம் இலங்கையில் பெரு வெள்ள அனர்த்தம் ஏற்பட்டது. பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுமாறு அரசாங்கம் அனைத்துலக சமூகத்திடம் கோரிக்கை விடுத்திருந்தது. இந்த நிலையில், 32 தொன் உதவிப் பொருட்களை ஐஎல்-76 ரக சரக்கு விமானத்தில் ரஷ்யா அனுப்பி வைத்துள்ளது. மொஸ்கோவில் இருந்து இந்த விமானம் நேற்று கொழும்புக்கு புறப்பட்டது. நகர்த்தக்கூடிய மின்சார உற்பத்தி நிலையங்கள், கூடாரங்கள், கோப்பைகள் என்பன இந்த உதவிப் பொருட்களில் அடங்கியுள்ளன. கடந்த மே மாதம் வெள்ளப்பாதிப்பு ஏற்பட்டவுடன் உடனடியாகவே பல நாடுகள் உதவிப் பொருட்களை அனுப்பியிருந்தன. எனினும் ரஷ்யா மிகத் தாமதமாக, இரண்டரை மாதம் கழித்தே, உதவிப் பொருட்களை அனுப்பி வைத்துள்ளமை குறிப்பிடப்பட்டுள்ளது. (உ)

# வாக்காளர் இடாப்பை பார்வையிட முடியும்

2017ஆம் ஆண்டுக்கான வாக்காளர் இடாப்பு பிரதேச செயலகங்களிலும், கிராம உத்தியோகத்தர் அலுவலகங்களிலும், மாகாண சபை அலுவலகங்களிலும், நாளை முதல் காட்சிப்படுத்தப்படவுள்ளது. வாக்காளர் இடாப்புக்களில் பொருத்தமற்றவர்களின் பெயர்கள் இடம்பெற்றிருந்தால், அது தொடர்பான எதிர்ப்புக்களை தெரிவிக்க அடுத்த மாதம் 8ஆம் திகதி வரை காலாவகாசம் வழங்கப்படவுள்ளது என்று மேலதிகத் தேர்தல் ஆணையாளர் எம். எம் முஹமட் தெரிவித்துள்ளார். பெயர்ப் பட்டியலில் தமது பெயர் இடம் பெறாதவர்களும் இந்த சலுகையைப்பயன்படுத்த முடியும். 2017ஆம் ஆண்டுக்கான வாக்காளர் இடாப்பு அடுத்த மாதம் 30ஆம் திகதி வரை உறுத்திப்படுத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ)

# தரம் - I அனுமதிக்கான நேர்முகப் பரீட்சை

பாடசாலைகளின் தரம் ஒன்றுக்கு மாணவர்களை இணைத்துக் கொள்வதற்கான நேர்முகப் பரீட்சை தற்போது நடைபெற்று வருகிறது. தற்போது ஆரம்பமாகியுள்ள உயர்தரப் பரீட்சைக்குத் தடை ஏற்படாத வகையில் நேர்முகப் பரீட்சையை நடத்துமாறு பாடசாலை அதிபர்களுக்கு கல்வி அமைச்சு உத்தரவு பிறப்பித்துள்ளது. அடுத்த மாதம் 15ஆம் திகதிக்கு முன்னர் நேர்முகப் பரீட்சையை பூர்த்தி செய்வது அவசியமாகும் என்றும் அமைச்சு தெரிவித்துள்ளது. அடுத்த மாதம் 30ஆம் திகதிக்குள் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களின் தற்காலிகப் பெயர்ப் பட்டியலை காட்சிப்படுத்துவதும் அவசியமாகும். அடுத்த மாதம் 30ஆம் திகதி முதல் ஒக்ரோபர் மாதம் 15ஆம் திகதி வரை எதிர்ப்புக்களையும், மேன்முறையீடுகளையும் சமர்ப்பிக்க முடியும் என்று கல்வி அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது. (உ)

# ரவியின் முடிவு ரணிலின் கைகளில்

மத்திய வங்கி பிணை முறி விற்பனை மோசடி விவகாரத்தில் குற்றச்சாட்டுகளுக்கு உள்ளாகியிருக்கும் வெளிவிவகார அமைச்சர் ரவி கருணாநாயக்க தொடர்பாக, ஜனாதிபதியும், பிரதமரும் முடிவெடுப்பார்கள் என்று ஐ.தே.க. பொதுச்செயலரும் அமைச்சருமான கபீர் காசிம் தெரிவித்துள்ளார். 'பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் முடிவுக்காக கட்சி உறுப்பினர்கள் காத்திருக்கின்றனர். ரவி கருணாநாயக்கவை அமைச்சரவையில் வைத்திருப்பதா இல்லையா என்பது குறித்து ஜனாதிபதியும், பிரதமரும் கலந்துரையாடி வருகின்றனர். ரவி கருணாநாயக்க பதவி விலக வேண்டும் என்று ஐ.தே.க. உறுப்பினர்கள் பலரும் கருதுகின்றனர். இறுதி முடிவை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அறிவிப்பார்." என்றும் அவர் தெரிவித்துள்ளார். அதேவேளை, அரசாங்கத்தின் பெயரை காப்பாற்றுவதற்காக ரவி கருணாநாயக்க பதவி விலக வேண்டும் என்று பிரதி சபாநாயகர் திலங்க சுமதிபால தெரிவித்துள்ளார். அரசாங்கத்தில் உள்ள அமைச்சர்கள் பலரும், இதே கருத்தை வலியுறுத்தி வருகின்றனர். (உ)

## அடிக்கல் நாட்டுவிழா



உடுப்பிட்டி கிராமசேவையாளர் ஜே /352 பிரிவில் கிராமிய செயலகம் அமைக்கப்படவுள்ளது. அதற்கான அடிக்கல் நாட்டு நிகழ்வு நேற்று நடைபெற்றது. இந்நிகழ்வில் கரவெட்டிப் பிரதேசசெயலர் சிறிமோகனன் அவர்கள் பிரதம விருந்தினராக கலந்து கொண்டார். இதற்கென பத்துலட்சம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. (உ-11)

# பிலிப்பைன்ஸுடன் ஒப்பந்தம்



இலங்கைக்கும் பிலிப்பைன்ஸுக்கும் இடையில் பாதுகாப்பு ஒத்துழைப்பை வலுப்படுத்துவதற்கு இணக்கப்பாடு காணப்பட்டுள்ளது. பயிற்சி, கல்வி, பாதுகாப்புத் துறையில் அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ளல் மற்றும் கடல்சார் பாதுகாப்பு போன்ற துறைகளை உள்ளடக்கியதாக இரண்டு நாடுகளுக்கும் இடையிலான பாதுகாப்பு ஒத்துழைப்பு பலப்படுத்தப்படவுள்ளது. இலங்கையின் வெளிவிவகார இராஜாங்க அமைச்சர் வசந்த சேனநாயக்கவுக்கும், பிலிப்பைன்ஸின் பிரதி தேசிய பாதுகாப்பு அமைச்சர் கார்டோசோ லூனாவுக்கும் இடையில் நடத்தப்பட்ட பேச்சுக்களிலேயே இந்த இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது. இந்தப் பேச்சுக்களில் பிலிப்பைன்ஸின் பாதுகாப்பு உயர் அதிகாரிகளும் இலங்கை வெளிவிவகார அமைச்சின் மூத்த அதிகாரிகளும் பங்கேற்றிருந்தனர். (உ)

# நாளை நாளும் கோளும்

10.08.2017 வியாழக்கிழமை ஏவிளம்பி வருடம் ஆடி மாதம் 25ஆம் நாள்

திருதியை பி.இ 12.26 வரை | சதயம் காலை 06.38வரை | மரணயோகம்

இராகுகாலம் 01.34-03.04 | சுபநேரம் 07.34-09.04 | எமகண்டம் 06.04-07.04

பன்னாலை வதத்தலம் கற்பகப்பிள்ளையார் கொடியேற்றம்

| மேஷம் | ரிஷபம் | மிதுனம் | கடகம் | சிம்மம் | கன்னி | துலாம் | விருச்சிகம் | தனுசு | மகரம் | கும்பம் | மீனம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| நற்செயல் | பக்தி | ஒய்வு | ஆர்வம் | நிம்மதி | பாராட்டு | வெற்றி | நலம் | நன்மை | பாசம் | இலாபம் | வரவு |

எதிரொலி
Ethiroli

## இலங்கைக்கு வருகிறது மிகப் பெரிய விமானம்



இலங்கை விமான சேவை வரலாற்றில் இம் மாதம் 14ஆம் திகதி பிர மாண்ட விமானம் ஒன்று கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்துக்கு வருகை தரவுள்ளதாக போக்குவரத்து மற்றும் சிவில் விமானசேவைகள் பிரதி அமைச்சர் அசோக் அபேசிங்க தெரிவித்தார். நேற்று நடைபெற்ற விசேட செய்தியாளர் மாநாட்டில் பிரதியமைச்சர் இந்த விட யத்தை குறிப்பிட்டார். கொழும்பு மற்றும்டுபாயைத் தொடர்புபடுத்தி இந்த புதிய விமான சேவை ஆரம் பமாகவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். மேலும் 6 விமானங்கள் எதிர்காலத்தில் கட்டுநாயக்க விமானநிலையத்தை கேந்தி ரமாக கொண்டு வர விருப்பதாகவும் குறிப் பிட்டார். கட்டுநாயக்க விமான நிலையத்தின் ஓடுபாதை புனரமைக்கப் பட்ட பின்னர் பெரும் எண்ணிக்கையிலான விமானங்கள் தரையிறங் கும் முதலாவது சந்தர்ப் பம் இதுவென்றும் பிரதிய மைச்சர் தெரிவித்தார். (உ)

## பாதுகாப்பு உத்தியோகத்தர் மீது கிழக்குப் பல்கலை தாக்குதல்



கிழக்கு பல்கலைக்கழ கத்தின் பாதுகாப்பு உத்தி யோகத்தர் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. நேற்று மாலை பல்கலைக் கழகத்தின் நிர்வாகப் பகு தியை மாணவர்கள் ஆக்கிர மித்ததன் காரணமாக அங்கு பதற்ற நிலைமை ஏற்பட்டதாகத் தெரிவிக்கப் படுகின்றது. இதன்போது பல்கலைக்கழகத்தின் கல்விசாரா ஊழியர்களின் பகுதி மற்றும் நிர்வாகப் பகுதிகளை மாணவர்கள் ஆக்கிரமித்ததாகவும், இதன்போது அங்கு பாது காப்பு பணியில் ஈடுபட்டி ருந்த பாதுகாப்பு உத்தி யோகத்தர் ஒருவர் தாக்கப் பட்டு, செங்கலடி வைத்திய சாலையில் சேர்க்கப்பட் டுள்ளதாகவும் தெரிவிக்க கப்படுகின்றது. பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி கிழக்கு பல்கலைக்கழகத் தின் மாணவர்களில் சில பிரிவினர் தொடர்ச்சியாகக் கவனயீர்ப்பு போராட்டங் களை மேற்கொண்டுவந்த நிலையில், நேற்று பிற்பக லும் ஆர்ப்பாட்டம் ஒன்றை மேற்கொண்டிருந்தனர் என் பது குறிப்பிடத்தக்கது. (உ)

## அந்த நாள் ஞாபகம்.....!



**1991.08.09**

யாழ்ப்பாணத்தில் விடுதலைப் புலிகள் ஜூலை 10 இல் ஆரம்பித்த ஆனையிறவு இராணுவ முகாமின் மீதான 'ஆகாய கடல் வெளித் தாக்குதல்' முடிவுக்கு வந்தது. இந்தச்சமரில் 604 விடுதலைப் புலிகள் உயிரிழந்தனர்.

## இனிமேல் 'ஸ்மார்ட்' அ.அட்டை

இலங்கையில் புதிய வகைத் தேசிய அடையாள அட்டை அறிமுகம் செய் யப்படவுள்ளதாக ஆட் பதிவுத் திணைக்களம் தெரிவித்துள்ளது. தற்போது பயன்பாட்டி லுள்ள தேசிய அடையாள அட்டைக்கு பதிலாக ஸ்மார்ட் தேசிய அடை யாள அட்டை எதிர்வரும் இரண்டு மாதங்களில் அறிமுகம் செய்யப்பட வுள்ளது. முதற் கட்டமாக புதிதாக அடையாள அட்டை பெற்றுக் கொள் பவர்களுக்கு ஸ்மார்ட் அடையாள அட்டையை வெளியிடுவதாக அதன் ஆணையாளர் நாயகம் வியானி குணதிலக்க தெரிவித்துள்ளார். இந்த அடையாள அட்டையில் பல பாதுகாப்பு விடயங் கள் உள்ளடக்கப்பட்டுள் ளதாக அவர் குறிப்பிட் டுள்ளார். இரண்டாம் கட்டத்தின் கீழ் 16 வய துக்கு மேற்பட்ட அனை வருக்கும் புதிய ஸ்மார்ட் அடையாள அட்டை வெளியிடவுள்ளதாக அவர் மேலும் தெரிவித் துள்ளார். (உ)

### தெற்கில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மறைவிடங்களில் இந்தக் குழுவினர் பதுங் கியுள்ளனர் என்றும் கூறப்பட்டுள்ளது. கொக்குவிலில் பொலி ஸாரை வெட்டிக் காயப் படுத்திய குழுவைச் சேர்ந்தவர்கள் என்ற சந்தேகத்தில், நான்கு பேர் அண்மையில் கொழும்பில் புறக்கோட்டை மற்றும் மட்டக்குளி பகுதிகளி லேயே கைது செய்யப் பட்டமையும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (உ)

## இலங்கை, கனேடிய அமைச்சர்கள் பேச்சு



இலங்கையுடன் ஆக்க பூர்வமான உறவுகளை மேம்படுத்திக் கொள்ள விரும்புவதாக கனடா அறிவித்துள்ளது. வெளிவிவகார ராஜாங்க அமைச்சர் வசந்த சேனா நாயக்க, கனேடிய வெளி விவகார அமைச்சர் கிறிஸ் டியா ப்ரீலாண்டுடன் சந்திப்பு நடத்தியுள்ளார். பிலிப்பைன்ஸின் மனிலா நகரில் தற்போது நடை பெற்று வரும் 24ஆம் ஆசியான் மாநாட்டுக்கு சமாந்திரமாக இந்தச் சந் திப்பு நடத்தப்பட்டுள் ளது. இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளை மேம்படுத்திக் கொள்ள நடவடிக்கை எடுக்கப் படும் என தெரிவிக்கப்பட் டுள்ளது.

தாம் பதவி ஏற்றுக் கொண்டதன் பின்னர் முதல் தடவையாக இலங் கையுடன் உயர்மட்ட அடிப்படையில் பேச்சு நடத்தியுள்ளதாக இதன் போது கனேடிய வெளி விவகார அமைச்சர் தெரி வித்துள்ளார். (உ)

## சட்டவிரோத மண் அகழ்வு 9 பேருக்கு விளக்கமறியல்

பருத்தித்துறை கற்கோவளம் பகுதியில் ஒன்பது பேர் நேற்று சட்டவிரோத மண் அகழ்வில் ஈடுபட்டிருந் தனர். அவர்களை பருத்தித்துறைப் பொலிஸார் நேற்று மாலை கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட 9 பேரையும் பொலிஸார் இன்று பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றில் ஆஜர்படுத்தினர். அவர்களை எதிர்வரும் 17 ஆம் திகதிவரை விளக்க மறியலில் வைக்க பருத்தித்துறை நீதவான் கந்தசாமி நளினி உத்தரவிட்டுள்ளார். (உ-11)

### இரணைதீவு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வீதித் தடைகள் போடப்பட் டுள்ளதோடு பொலிஸாரும் குவிக்கப் பட்டுள்ளனர். இப்போராட்டம் குறித்துக் குறிப்பிட்ட இரணைதீவு மக்கள், "இரணை தீவில் நாங்கள் 100 நாட்கள் போராட்டம் நடத்தினோம். அங்கு நாங்கள் ஏமாற்றப்பட்டுள்ளோம். தற்போது கொழும்பில் போராட்டம் நடத்த வந்துள்ளோம். எமது போராட் டத்துக்கு ஜனாதிபதி உள்ளிட்ட நல் லாட்சி அரசாங்கம் தீர்வு வழங்கும் எனும் நம்பிக்கையில் 75 குடும்பங்களைச் சேர்ந்த 180 பேர் ஜனாதிபதி செயலகத்துக்கு வந் துள்ளோம்.

நாங்கள் கேட்கும் காணிகள் 150 வருட பூர்வீக காணிகள். அவை விடுவிக்கப்பட வேண்டும். அங்கு வசித்த 182 குடும்பங்க ளின் காணிகளுக்கான உறுதிப்பத்திரங்கள் எங்களிடம் உள்ளன. 1992 ஆம் ஆண்டு காணப்பட்ட யுத்த சூழல் காரணமாக நாங்கள் அங்கிருந்து வெளியேறினோம். தற்போது பூநகரி பிரதேசத்தில்இடம்பெயர்ந்து வாழ்ந்து வருகின்றோம்' - என்றனர். (எ)

### மீண்டும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கைது செய்யப்பட்டவர்கள் பெயர் விபரங்கள் ஏதும் வெளியாகவில்லை. பொலிஸார் மீது மேற்கொள்ளப்பட்ட வாள்வெட்டு தாக்குதல் சம்பவம் தொடர்பில் ஏற்கனவே 11 பேர் கைது செய்யப்பட்டிருந்தனர். இந்நிலையில் நேற்று இரவு தெல்லிப்பளைப் பிரதேசத்தில் 24 வயதுடைய ஒருவர் கைது செய்யப்பட்டு யாழ்ப்பாணம் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட் டிருந்தார். இன்று அதிகாலை கைது செய்யப்பட்ட இருவருடன் வாள் வெட்டுச் சம்பவத்துடன் தொடர்பு டையவர்கள் எனும் சந்தேகத்தில் இதுவரை 14 பேர் கைது செய்யப் பட்டுள்ளனர். இதேவேளை இன்று கைது செய்யப்பட்டவர்களை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளதாகப் பொலிஸார் குறிப்பிட் டுள்ளனர். (உ)

### வெளிநாட்டு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கைதுகளை அடுத்து, மூன்று வாள்கள், ஒரு கத்தி, ஒரு உந்துருளி, மற்றும் ஒரு வெளிநாட்டுத் தயாரிப்பு கைக்குண்டு என்பன கைப்பற்றப்பட்டுள்ளன. எனினும் சுடுகலன்கள் எதுவும் கைப்பற்றப்படவில்லை." என்றும் அவர் கூறியுள்ளார்.(எ)



யாழ்.மண்ணில் முதன்முறையாக
சினிமாப் பாடல்களுடன்...

பிரபல தென்னிந்தியப் பாடகர்
கலைமாமணி
உன்னிகிருஷ்ணன்
உத்ரா உன்னிகிருஷ்ணன்

இணைந்து வழங்கும்

'இன்னிசை பாடிவரும்'...

மாபெரும்
திரை இசை நிகழ்ச்சி

நிகழ்ச்சி ஒருங்கிணைப்பு
K.T.பிரசாத்

மாலை 6 மணி
இம்மாதம் ஒகஸ்ட் 12 இல்

டிக்கெட்டுக்கள்
300/=, 500/=, 1000/=

யாழ். ஸ்ரான்லி றோட்,
வெலிங்டன் தியேட்டர் மைதானம்

500/=, 1000/= டிக்கெட்டுகளை
கொள்வனவு செய்பவர்களுக்கு ஆசன வசதி உண்டு.

தொ.பே.: 077 550 4910

இப்பத்திரிகை சிவஞானம் ஜெயானந்தனால் பருத்தித்துறை வீதி, 5ஆம் கட்டை, கோப்பாய் மத்தி, கோப்பாய் என்ற முகவரியிலுள்ள நாவலர் அச்சகத்தில் 09.08.2017 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.